# ஞானக் கூத்தன்

## ஊர் இலேன் காணியில்லை

முற்றிலும் வேறாகி விட்டது இந்தப்
பிட்சைக்கார வாழ்க்கை.

புதிய சாலைகள்
புதுப்புது தெருக்கள் கூடவே
புதுப்புது சந்துகள்
நாய்கள் மட்டுமே நினைவில் கொள்ளக் கூடிய
புதுப்புது மார்க்கங்கள்
புதிய ஆண்கள் புதிய பெண்கள்

ஒரு சொல்லும் உரத்துப் பேசாத நான்
உரத்துக் கூச்சலிடக் கற்றுக் கொண்டு
விட்டேன்

வற்றிப் போகும் தொண்டைக்குக்
கொஞ்சம் தண்ணீர் காட்டுகிறேன்
கூச்சலிட்டுக் கேட்பதும் நின்று போய்விட்டது
எல்லோருக்கும் என்னைப்
பிட்சைக் காரனென்று தெரிந்து விட்டது

பிட்சைக்கார வாழ்க்கையில்
நிகழ்வுகள் ஞாபகம் வருகிற அளவுக்கு
ஞாபகத்தில் மனிதர்கள் வருவதில்லை.
முகங்கள் மறந்து போகின்றன.
மிகமிக அழகான ரூபவதி கூட
நினைவில் வருவதில்லை

கோயில் குளங்களில் குளிக்கிறேன்
எனது செப்புப் பாத்திரங்களைக் கழுவிப்
படிக்கட்டில் காய விடுகிறேன்
எனது வேட்டியில் மேல் துண்டில்
பல ஊர்த் தண்ணீர்க் கறைகள் பற்றிக்
கொண்டுள்ளன.

பிட்சை கேட்கும் என்னை
இப்போது யாரும் திட்டுவதில்லை
உழைத்து சாப்பிடச் சொல்லி
எனக்கு யாரும் அறிவுரை சொல்வதில்லை
குழந்தைகள் என்னைக் கண்டு பயப்படுவதில்லை
நாய்கள் என்னைக் கண்டு குரைப்பதில்லை
எனது பிட்சைப் பாத்திரங்களை அவை
நம்புகின்றன.

மரங்களின் நிழலில் படுக்கிறேன்
தாவரங்களின் துளிர்களைப் போல
அழகு வேறு பொருள்களில் உண்டா என்ன?

ரம்பையும் ஊர்வசியும் திலோத்தமையும்
ஆதியில் துளிர்களில்தான் பிறந்தார்களோ?
எனக்கென் பெயரும் ஞாபகம் இல்லை
சாமாவா சடகோபனா?
கடைசியாக யார் கேட்டார்கள்? நான்
சொன்னேன்?

தண்டவாளத்தை ஒட்டிய
ஒற்றையடிப் பாதையில் நடந்து செல்லும் போது
என்னைக் கடக்கும் ட்ரெயின்கள்
எந்த ஊர் போகின்றன என்று
கவலைப் படுவதே இல்லை.


*சிற்பம்: ரம்யா ராஜன்*